சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS. No.26/2016

பெயர் திருமதி. கற்பகம் நாள்.02.02.2026
க/பெ. பட்டாபி

**<u>பிரதிவாதி சாட்சி 1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. வாதிகள் தங்களுக்கு இடம் வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளனர். வாதிகள் எனக்கு உறவினர்கள் அல்ல. 1ம் பிரதிவாதி எனக்கு தெரியும். மற்ற பிரதிவாதிகள் எனக்கு உறவினர்கள் அல்ல. வழக்கு சொத்தின் புல எண் எனக்கு தெரியாது. எவ்வளவு சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சுமார் 70 செண்ட்டிற்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 70 செண்ட்டும் ஒரே இடமாகத் தான் உள்ளது. அதன் 4 எல்லைகள் எனக்கு தெரியாது. பொதுவாக ஒரு சொத்தை அனுபவித்தால் 4 எல்கைகள் யார் அனுபவம் செய்கிறார்கள் என தெரிய வரும் என்றால் சரிதான். அதனால் நான் சொத்தை அனுபவிக்கவில்லை என்றால் சரியல்ல. இன்றைய தேதி வரை நான் தான் அனுபவம் செய்து வருகிறேன்.

2. நான் லட்சுமி மற்றும் அவரின் மகள்களிடமிருந்து கிரையம் பெற்றேன். கிரையத்திற்கு முன்பு பட்டா மற்றும் ஆதார் அட்டை ஆகியவற்றை பார்த்து கிரையம்

பெற்றேன். அந்த பட்டா எண் எனக்கு தெரியாது. அந்த பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் காத்தாடி பெயரில் இருந்தது. எனவே இந்த சொத்தை நான் கிரையம் பெறும் போது காத்தாடி பெயரில் பட்டா இருந்தது என்றால் சரிதான். எனவே அது காத்தாடிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். நான் பார்த்ததாக கூறும் பட்டா எந்த வகை பட்டா என்றால் அரசாங்கம் அளித்த பட்டா. அந்த பட்டாவில் என்ன நிபந்தனைகள் போடப்பட்டது என்று தெரியும். தற்போது அதில் என்ன நிபந்தனைகள் உள்ளது என்று தனக்கு தெரியாது என சாட்சி கூறுகிறார்.

3. என்னுடைய கிரைய ஆவணத்தில் 1ம் வாதி இளவர் என கண்டுள்ளது என்றால் சரிதான். அவர் இளவர் என்பதற்கான ஆவணங்கள் நான் பார்க்கவில்லை. நான் கிரையம் வாங்கும் காலத்தில் 1ம் வாதி இளவர் அல்ல என்றாலும், அவரை ஏமாற்றுவதற்காக என்னுடைய கிரைய ஆவணத்தை தொலைத்துக் கொண்டேன் என்றாலும் சரியல்ல. அந்த பட்டாவில் 30 ஆண்டுகளுக்கு சொத்தை விற்கக்கூடாது என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரியல்ல. உண்மையான கிரைய ஆவணத்தை பார்த்து நான் சொத்துகளை கிரையம் வாங்கவில்லை என்றாலும், எனவே நான் கிரையதாரர் இல்லை என்றாலும் சரியல்ல. பி.த.சா.ஆ.2 ஆவணம் செல்லத்தக்கது என்றாலும், வாதிகளை அது கட்டுப்படுத்தாது என்றாலும் சரியல்ல. பி.த.சா.ஆ.2 ன் கீழ் நான் பெற்ற மற்ற கிரையங்களும் செல்லத்தக்கது இல்லை

என்றாலும் சரியல்ல. முறையான ஆவணங்களை பார்த்து நான் கிரயம் வாங்கவில்லை என்றாலும், அதனால் வழக்கு சொத்தை பொறுத்து நான் எவ்வித உரிமையும் கோர முடியாது என்றால் சரியல்ல. வழக்கு சொத்துகளை வாதிகள் தான் அனுபவம் செய்கிறார்கள் என்றால் சரியல்ல. நாங்கள் வழக்கு சொத்தின் அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல. எனவே வாதிகள் கூறியவாறு தீர்ப்பாக வேண்டுமென்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**